Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி ௴ 28௳ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூஎ] யாழ்ப்பாணம்:- மன்மத ௵ ஐப்பசி ௴ ௧அ௳ வெள்ளிக்கிழமை (4 NOV. 1955) [இல-௬௧]

அரசியல் அலை

## சம உரிமை வேண்டுவதா..........
## தனி உரிமை கேட்பதா..........
## எது வகுப்புவாதம்?

### செந்தமிழ்தந்தசெவ்வேவிடத்திற் சிங்கள வரமா?

சாமமும் கழன்று நாலும் கிழந்த பக்குவத்தில் வாக்காளர் மதிப்பை இழந்து வருந் தேர்தலிலே வழி தவறிப் போய்விடுவாரோ என்று பயந்திருந்த திரு. தகநாயகவுக்கும் முதலமைச்சர் பதவியை மும்முறை கைநழுவவிட்டு முகத்தை வெளியிற் காட்டமுடியாது ஒதுங்கியிருந்த திரு. பண்டார நாயகாவுக்கும் எதிர்கால மேகத்தில் ஒரு எதிர் பாராத மின்னல் தோன்றித்தோன்றிப் புத்துயிர் அளிக்கின்றது. இன்னம் ஒருமுறை இந்த அரசியல் நாடகத்தை ஆடிமுடிப்போம் என நினைத்து ஆற்ருத ஞெண்டுபோல ஒரு மொழித் தழலைக் கௌவிக் கூத்தாடுகிருர்கள்.

சனநாயகம் சம உரிமை என்ற சொற்றொடர்களை இந்தஇருவரும் எடுத்துரைத்த அளவுவேறெவரும் இலங்கையிற் கையாளவில்லை. ஐ. தே. கட்சியின் எதிர்ப்புக்கு இடதுசாரிகளிலும் பார்க்க முக்கியமாய் மூன்றவர்கள் இவர்கள். தமிழர்கள் முசல்மான்கள் யாவருக்கும் உரிய உரிமைகளைக் கொடுப்பதற்கு உடம்பாடானவர்கள் என்று ஓயாது சொல்லி வந்தவர்கள். ஆனால் காலத்தின் கோலத்தினலும் கர்மவினையினலும் வாழ்க்கையில அடைந்த ஏமாற்றத்தினை போலும் இவர்கள் ஒரு மொழி இயக்கம் என்னும் கடைசித் துரும்பை எட்டிப் பிடித்துத் தேர்வுக்கடலைத் தாண்டி அரசியல் ஆதிக்கம் என்னும் அக்கரையை அடைய எத்தனிக்கின்றுர்கள.

எத்தனிப்பதில்ஒருபிழையுமில்லை ஊரிலான பேர்லான் என்று உலகப் பொதுவான ஒப்பற்ற கடவுளை ஏன் இந்த விவகாரத்துக்குள் இழுத்துவிடல் வேண்டும. எந்தத காரியம இனிது முடிவதற்கு இறைவனை வணங்குதல் என்ற அளவில் நிற்பதா எனக்கு இன்னொருவருக்குத் தீங்கிழை என்று வரங்கேட்பதா?

கதிரைமலைக்கு ஒரு மொழி வரக காவடியெடுக்கும் திரு. தகநாயகாவின் சிங்கள பாஷா பெரமுனையார் ஆங்கு அப்பழம்பதியிலே திருமுருகனைத் தரிசித்து வணங்குவோர் எம்மொழிகள் பேசுபவர்கள் என்று அறிவார்களா?

சம உரிமை என்ற பெருநோக்கு சனநாயகமாகுமா? அல்லது ஏனையோரைப் புறக்கணித்து விட்டு ஒரு சாராருக்கே முழுஉரிமையையும் பெறுவது சனநாயகமாகுமா?

ஒருமொழிக்கு தனி உரிமைகேட்டு மற்றைய மொழியை ஒதுக்குவது வகுப்புவாதமா?

அல்லது இரு மொழிகளுக்கும் சமஉரிமைவேண்டுவது வகுப்புவாதமா?

கதிரைமலைக் கந்தனைத் தேடி மாபெரும் ஊர்வலத்திற் செல்லும் ஒருமொழி இயக்கத்தாருக்கு அப்பெருமான் சிந்தை தெளிவித்து உண்மையை அறிய அருள்புரிவாராக.

## மொழிப் பிணக்கு வாக்கு வாதம்

### நாட்டின் சமாதானத்தை நிலைகுலைக்கத்தக்கது

### பௌத்த அறிஞர் கலாநிதி இ. டபிள்யு. அதிகாரம் அவர்கள் கருத்து

தம்பதெனியாவைச் சேர்ந்த மெத்தியகானே என்னு மிடத்திலுள்ள அரசாங்க சிங்களப் பள்ளிக்கூடத்தில் தமிழ்மொழி கற்பிப்பதற்குப் பிரத்தியேகமான ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அதை நினைவு கூரும்பொருட்டு நடந்த பகிரங்கக்கூட்டத்திலே பௌத்தஞானசங்கப் பாடசாலைகளின அதிபர் கலாநிதி இ. டபிள்யு அதிகாரம் அவர்கள் பேசும்போது நாட்டுக்கு வேண்டிய எல்லாவற்றுள்ளும் சமாதானத்தைப் பாதுகாப்பதே முதன்மை வாய்ந்தது. இத்தகைய சமாதானத்துக்குப் பங்கம் விளைக்கக்கூடியது எதுவாயிருப்பது எதுவாயினும் எழுந்தால் அதைச் சாதுரியமாய்க் கையாளுதல் வேண்டும் அல்லது அது முழுவதும் கைவிடப்பட வேண்டும் என்று கூறி இன்று நாட்டில் நடக்கும் மொழி வாக்கு வாதங்களை வன்மையாகக் கண்டித்தார். அத்தருணம் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் முன்னொருமுறை இந்தியாவில்நடந்தகலகத்தால் உண்டான பெரும் நட்டத்தைஎடுத்துக் காட்டிசிங்களவர் தமிழர் முஸ்லிம்கள் ஆகிய யாவரும் பொதுநன்மைக்காக ஒத்துழைக்குமாறு வேண்டினர்.

## திருவள்ளுவர் திருநாளில் குருபூசை

### மாசி உத்திரத்தில் செய்தலே மேலான தென்பது முடிவு

### சைவ முறைப்படி செய்து சிறந்த நலன்களைப் பெறுக

சற்குருநாத சுவாமிகளாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான அவர்கள் வகுத்துத தந்தருளிய மாசி மாதத்தில் வரும் உத்திர நட்சத்திரத்தை திருவள்ளுவர் குருபூசைத் திருநாளாகச் சைவச்சால்பு வழிவளரும் நம தமிழகத்து அன்பர்கள அனைவரும் கொண்டாட வேண்டியது கடமையாகும்.


உத்திரம் பொதுவாகச் சைவத் தமிழர்களுக்கு விசேட திருநாளாகும். வள்ளுவனைப்போல் சிவஞானச் செல்வர்களான மெய்ப்பொருணயனூர், சண்டேசுரநாயனூர், மறைஞான சம்பந்தர் முதலானேரும், யாழ்ப்பாணம் கடையிற் சாமியார் பரம்பரையைச் சார்ந்த முருகேசுச்சாமியார், சடைவாத சாமியார் குயின்ஸ்பெரி வைநாத சித்தர் போன்ற சிவ ஞானியாளர்களும் உத்திர நட்சத்திரத்தில் தேகம் நீத்தனராதலின் அத் திருநாளில் ஓர் விசேடமிருக்கின்றது. சைவர்கள் ஒன்றுபட்டு இத் திருநாளைப் புத்த

தெல்லிப்பழை
திரு செ. கோவிந்தசாமி

ஜெயந்திபோல் ஈழநாடு முழுவதும் கொண்டாடுவதற்கு ஒருவித ஆட்சேபமும் இல்லையெனலாம்.

இன்னும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள் பெரியபுராண வசனத்தில் சிவபெருமானே முழுமுதற் கடவுளென்றும், வேதமும் சிவாகமமும் அவர் அருளிச்செய்த முதல்நூல்கள் என்றும் அவற்றுள் வேதம் பொது நூல் சிவாகமம் சிறப்புநூல் என்றும் விபூதி உருத்திராட்சத்தையே சிவ சின்னங்கள் என்றும் ஸ்ரீ பஞ்சாட்சரமே சிவமூலமந்திரமென்றும், சிவலிங்கோபாசனையே சிவபிரானுக்குச் செய்யும் மிக மேலாகிய வழிபாடு என்றும், விபூதி உருத்திராட்ச தாரணமும், ஸ்ரீ பஞ்சாட்சர செபமும், சிவலிங்கோபாசனையும் வேதத்தில் விதிக்கப்படினும் சிவாகமத்தில் விதித்தபடிசிவதீட்சை பெறாதுகொண்டு அநுட்டிக்கப்பட்டாலன்றி முத்தி சித்தியாது என்று விசுவசித்து, அங்ஙனம் விசுவசித்தபடியே ஒழுகும் மார்க்கம் சைவசமயமெனப்படும் என்றும் அறியத் தந்திருக்கின்றுர். அறுபத்துமூன்று நாயன்மார்கள் பணி வாசகர்—சேக்கிழார்—சந்தானகுரவர் எனும் இவர்களாலுமே தமிழ்நாடெங்கும் சைவ சமயம் தழைத்தோங்கியது—ஆதலால் சைவசமயிகள் யாவரும் அவ்வுண்மை நாயன்மார்களுக்கு விதிப்படி சிரத்தை

தொடர்ச்சி 6-ம் பக்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர்வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

யாழ். மன்மத ஸ்ரீ ஐப்பசிமீ கஅஉ வெள்ளிக்கிழமை


## மதமாற்றத்தில் எவ்விதமாற்றமுமில்லை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைநிறுவிச் சைவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வழிதேடியநியாயவாதி திரு சி. நாகலிங்கம் அவர்களின் நூற்றாண்டு நினைவு விழாவின்போது கட்டுரை எழுதியவர்களும் சொற்பெருக்காற்றியவர்களும் ஒவ்வொருவரும் அக்காலத்திலே மதமாற்றத்தினால் விளைந்த தீமையைச் சுட்டிக் காட்டியே புகழ்ச்சிக்குரிய பெரியாரை வியந்தனர். அன்னியர் ஆட்சியில் இருந்த சூழலும் இப்பொழுதுள்ள நிலைமையும் வேறெனினும் இன்னமும் மதமாற்றம் மறைமுகமாக நடைபெற்றுக்கொண்டே வருகின்றமைக்கு யாதுதான் காரணமாகுமோ?

வாழ்க இவ்வையகமனைத்தும் என்ற கொள்கையுடையவர்கள் சைவர்கள். மறு மதத்தவர்களை ஒருபொழுதும் தஞ்சமயத்துக்கு வாருங்கள் என்று வலிந்திழுக்க மாட்டார்கள்; இல்லை, அன்னியோன்யமாகவேனும் அழைக்கமாட்டார்கள். அத்தகையவர்களிடமிருந்து புறமதத்தவர்கள் இளைஞர்களை மறைமுகமாக ஏன் இழுத்தல் வேண்டும் என்று நாம் கேட்கின்றோம்.

சைவப் பிள்ளைகள் சைவக் கல்விக் கழகங்களிலே பயின்று வருதல் இன்றியமையாது வேண்டப்படுவதொன்று என்று நாவலர் பெருந்தகையார், இராமநாத வள்ளல், இந்துக்கல்லூரி நிறுவிய நியாயவாதி நாகலிங்கம் அவர்கள் தங்கள் காலத்திலே பெரிதும் முயன்று வழி காட்டினார்கள். சைவபரிபாலன சபை சைவ வித்தியா விருத்திச் சங்கம் விவேகானந்தசபை கொழும்பு இந்து வித்தியா சங்கம போன்ற பல நிலையங்கள் முன்னோர் செய்த நற்றொண்டை பற்பலவகையிற் பெருக்கிப் பணியாற்றி வருகிறார்கள் என்பதுண்மையேயெனினும் சைவ இளைஞர்கள் ஆசிரியர்களாகப் பயிற்றப்படுவதற்கு வேறுமதப் புகுகின்றார்கள என்பதை நோக்குமிடத்து அரசினரின் கல்வி ஒழுங்குத் திட்டத்தில் இழுக்கு

இருத்தல் வேண்டும்; இருக்கும் அப்பிழையைக் கண்டுங் காணாது வாளாவிருக்கின்றார்கள் சைவத்தலைவர்கள் என்றல்லவா சொல்ல வேண்டியிருக்கிறது. தமிழ் கற்கும் பிள்ளைகளிலே சைவர்கள் எத்தனை, மறுமதத்தவர்கள் எத்தனை. ஆசிரியர்களைப்பயிற்றும் கலாசாலைகள்சைவர்களுக்குஎத்தனை, மறுமதத்தவர்களுக்கு எத்தனை- இப் புள்ளி விபரங்களையெல்லாம் எடுத்தாராய்ந்து பார்த்தால் இதன் உண்மை தெள்ளிதிற் புலப்படும். ஆகவே புதர்மறைவிலிருந்து வேட்டுவன் புட்சிமிழ்த்தாங்கு ஊன் உடை உழைப்புஎனனும் கண்ணியையிட்டு இப்பொழுதுள்ள ஆசிரிய கலாசாலைப் பயிற்சி நடைமுறை ஒழுங்குகளுக்குப் பின் ஒதுங்க மனச் சான்றற்றவர்கள் இளைஞர்களைக் கவர்ந்து செல்கின்றமை சைவர்களுக்குப் பேராபத்தான காரியம் என்பதைப் பொறுப்பு வாய்ந்தவர்கள் நினைக்கின்றார்களில்லை.

மதக் கல்வி வேண்டும் என்று மந்திரிசபை வாய் வேதாந்தம் பேசுகின்றதேயன்றி எவ்விதத்தில் இதற்கு வழி தேடுதல் வேண்டும் என்ற திட்டம் வகுக்கின்றதில்லையே. ஆண்டுக்காண்டு ஆசிரியராகப் பயிற்றப்படுவோர் அந்த அந்த மதத்துக்குரிய பிள்ளைகளின் தொகையின் வீதப் படியான தொகையினராக விருத்தல்வேண்டும என்று எடுத்துச் சொல்லவும் வேண்டுமா? குழந்தைப் பிள்ளைகளுக்கும் இக்கொள்கை விளங்குமே.

பரோபகாரி திரு. நாகலிங்கம் அவர்களை நினைவு கொள்வது மத மாற்றத்தைத் தடுக்க உரிய வழி வகைகளைத் தேடுவதாக இருத்தல் வேண்டும். நாவலர் அவர்கள் காலத்திற்போலல்லாது இப்பொழுது மதமாற்றநோயானது உள்ளிருந்து உடற்றுகின்றது. கள்ளங்கபடமற்றஇளைஞர்களைக் கொள்ளைகொள்ளுகின்றது. எனவே சைவத் தலைவர்கள் சபைகள் சங்கங்கள் மன்றங்கள் மடங்கள் ஒருங்கு சேர்ந்து நோய் எங்கிருந்து தோற்றுகின்றதென்பதை [illegible] ணர்ந்து ஆவன [illegible] களாக.

## வாழ்க்கை வானில்

— வளர்மதி

### நல்லெண்ணம் வளர்ப்பது நாட்டிலா வெளியிலா?

● சுற்றித் திரிந்த கால் சுற்றியே திரியும். ஊர்வலமும் ஊர் உலாத்தும் ஓயாது செய்தும் பிரதமருக்கு அந்தப் பிரேமை இன்னும் விட்டுப் போகவில்லை.. அவுஸ்திரேலியாவுக்குப் போய் அங்கே பொழுது போக்கலாம் என்று புறப்பட்டுவிட்டார் பிரதமர். காரணம் நல்லெண்ணம் வளர்ப்பதற்காகவாம். ஆனால் அவர் தலைமை தாங்கும் ஐக்கிய தேசியகட்சியிலே நல்லெண்ணம் குலைந்து விபரீத விளக்கம் மலிந்து வருவதை இவர் எண்ணினாரில்லை.

பாணந்துறைப் பிரதிநிதி தொடுத்த பாணத்துக்கஞ்சிவிட்டாரா?

### மொழி முன்னணிகளுக்கு முடிவில்லையா?

● எல்லாக் கட்சிகளும் முன்னணியில் நின்றாற் பின்னணியில் எக்கட்சிகளுக்கு இடம் இருக்கும்! ஐக்கிய தேசியக் கட்சித் தமிழ் அங்கத்தவர்களும் ஒரு முன்னணிக்கு முயன்று வருகின்றார்களாம்.- பாணந்துறை யோசனைக்குப் பதிலுபாயமாம் இவர்கள் ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். ஆகவே இந்த முன்னணிகள் எல்லாம் சேர்ந்து ஒரு முன்னணி மாநாடு கூட்டி முன்னணியென்றால் என்ன என்று முதலிலே முடிவு செய்தால் நன்றாயிருக்கும்.

இளைஞர் ஒற்றுமை முன்னணி, இடதுசாரி முன்னணி. மொழி இயக்க முன்னணி, போட்டி ஒழிக்கும் முன்னணி, தமிழக் கட்சிகள் முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி ஒருமொழி முன்னணி!

## திருமணம்

### இரகுநாதன் — இராசம்மா

இந்துசாதனக் காரியாலயத்திற் கடமையாற்றும் நாயன்மார் கட்டு திரு. காசிப்பிள்ளை இரகுநாதன் அவர்கட்கும் வட்டுக்கோட்டை திரு. சுப்பிரமணியம் மகள் திருமதி இராசம்மா அவர்கட்கும் ஐப்பசி 16 உ புதன்கிழமை (2-11-55) சைவமுறைப்படி திருமணம் நிறைவுற்றது. இந்துசாதனக் காரியாலயத்திலிருந்தும் பிற இடங்களிலிருந்தும் வந்து அன்பர்கள் குழுமி மணமக்களை ஆசீர்வதித்தேகினர்

உடலும் உயிரும்போன்று மணமக்கள் இருவரும் ஒருமித்து இல்லறம் இனிது நடாத்தி இறைவன் திருவருளால் இன்புற்று வாழ்வார்களாக.

### கோணேசர் ஆலயம்பற்றிக் குதூகலிக்கச்செய்யும் செய்தி

புதியகோணேசர் ஆலய அமைப்பு வேலைகள் நடந்து கொண்டிருக்கும் பொழுது பழைய ஆலயம் அமைந்திருந்த இடம் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றதாம். காண வந்த பழைய சுவரும் கற்களும் இட நிச்சயத்துக்கு உதவுகின்றன. இவற்றைப் பார்வையிடுதற்குப் பெருந் தொகை மக்கள் நாள்தோறும் செல்கின்றனராம். செய்தி சைவ உலகில் பெருங்குதூகலத்தை உண்டாக்குகின்றது.

முன்னதற் தொடர்ச்சி

## மகாகவி காளிதாசரின்

# குமார சம்பவம்

தமிழாக்கம்

பரமேஸ்வரக்கழகம் — ச. இராமச்சந்திரன்

மைந்துசால் வளியில் வளர்க்குங் குவளை மலரால மரலெனச் சுழலல்
எந்த நோமுங் கொள் விணைவிழி யாடனை னின்ப நோக்கிளம்பிணை மானை
முந்தை நான் வேண்டி முயன்று பெற்றாளோ முன்னரன்றேவிளம்
[பிணைக்கே
இந்த மானேக்கி இதனையீந்தாளோ யாதொன்று மறிகிலேம் யாமே. (46)
அஞ்சனந் தீட்டுங் கோலதினின்றே அழகுபெற் றய்யுமை நடையத்
தஞ்சமென் றதற்குச் சரணளித் தோம்பும் தைலானிணை விழிதாங்கும்
விஞ்சு பேரழகார் வில்லெனும் புருவம வேணில்வேள் நோக்கலான்
[மேலோர்
அஞ்சுமைங் கணைக வணைத்தரு வில்வி னடைந்தநன் செருக்கினின்
[றகன்றான். (47)
விலங்கினங் களுக்கு முனத்திடை நாணம் மேவுமேல மேலுறு மேகம்
இலங்கு மாலிமய மகளைதன் கூந்த லெழிலினைத் தானினி நோக்கின்
அலங்குதன் கேச மணியெனக் கருதி அகமகிழ் வதுகொளுக கவரி
கலங்கியே தங்கள் கேசமீ துள்ள காதலைக் கருத்தினின் ஒழிக்கும். (48)
உலகெலா நிறைந்தே ஒளிசெபு மழகை ஓரிடத் தோருரு வதனில்
நிலவிடக் காண நினைந்திடு மயோன் நிறைகவி னுறுபொருள் களிலே
அலகிலா அழகார் பொருள்களைத் தெரிந்தங் கவ்வவற் றினுக் குரித்தாகி
இலகுறு மிடத்திலெழிலுற அமைத்திவ் பேர்திழைதனைப்படைத்தனனால்.

வேறு

எவ்வுலகி னுந்தனுள இச்சை யினி யங்கும்
அவ்வியலி னாதனும் ஆங்கினி தடைந்தே
இவ்வியலி னளிறைவ னுசுகுரியன் சொன்வான்
செவ்வியுறு கூறதிரு மேனிதனி னென்றான். (50)

## இராமச்சந்திர
# சஷ்டியப்த பூர்த்தி விழா

ஆத்மஜோதி ஆசிரியரும் புகையிரதப் பகுதிக் காரியாலய உதவி அதிபருமாகிய திரு. க. இராமச்சந்திரன் அவர்களின் சஷ்டியப்த பூர்த்திவிழா கொழும்பு சிந்துப்பிட்டி சுப்பிரமணியசுவாமிகோவில் மண்டபத்தில் கௌரவ சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள்தலைமையில் ஷண்முக அர்ச்சனை வழிபாட்டின்பின் நடைபெற்றது.

தலைவர் அவர்கள் திரு. இராமச்சந்திரன் அவர்களின் சேவைகளைப் பாராட்டி அவருடைய முன்மாதிரியை மற்றவர்கள் பின்பற்றுமாறுகேட்டுக்கொண்டார்.

இந்துசாதனப் பத்திரிகை ஆசிரியர் திரு. ஆர். [illegible] களைப் பேணி பெரியோரைத் தேடிச்சென்று போற்றி அவர்களின் திருவடி நீழலில் திரு. இராமச்சந்திரன் அவர்கள் சைவப் பண்பாட்டுச் சிறப்புக்கமைய வாழ்கின்றாரென்று புகழ்ந்து அவர் சமயத்துக்கும் தமிழுக்கும்செய்து வருமசேவைகளைப் பாராட்டினார்.

ஸ்ரீ வள்ளியப்பச் செட்டியார், சுவாமி வரானந்தர், சச்சிதானந்த யோகீஸ்வரர், திரு. வே சு. கந்தையா ஆகியோரும் திரு. இராமச்சந்திரனைப் பாராட்டிப் பேசினர்.

சுவாமி சிவானந்தர், சுவாமி இராமதாசர், குன்றக்குடி அடிகளார் முதலிய பல பெரியோருடைய வாழ்த்துரைகளும் வாசிக்கப்பெற்றன.

## வளர்ந்தோர்கல்விக்கழகம்

வடபகுதி வித்தியாதிகாரி ஸ்ரீ எஸ். யு. சோமசேகரம் அவர்கள் சாவகச்சேரியில் வளர்ந்தோர் கல்விக் கழகமொன்றைத் திறந்து வைத்துப் பேசும்போது அக்கல்விக்கழகத்தால் முதிர்ந்தவர்கள் அடையக்கூடிய நன்மைகளை எடுத்துக்காட்டி அதை நன்கு பயன்படுத்துமாறு யாவரையும் கேட்டுக்கொண்டார். ஆசிரியர் திரு. மா. பீதாம்பரம் அவர்கள் அக்கழகத்தின் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்று நடத்துகின்றார்.

## சமயதீட்சை

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் ஷை சபை நாவலர் மண்டபத்தில் ஐப்பசி மாதக் கடைசி வெள்ளிக்கிழமை (11—11—55) யன்று சமயதீட்சை நீராவிமடம் ஸ்ரீமத் ந. வைத்தியநாதக் குருக்களால் செய்து வைக்கப்படும். சமய தீட்சை பெற விரும்புகிறவர்கள் ஆசாரசீலராய் அன்று காலை 8 மணிக்கு மண்டபத்துக்கு வருவார்களாக.

மு, மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம், 2-11-55.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் இளைஞர் முன்னணியின் வேண்டுகோள்

## தமிழினத்துக்கு வரும் அபாயத்தை நீக்க வழிவகை

இலங்கைவாழ் தமிழ் பேசும் இளைஞர்கள், சமூக பொருளாதார அரசியல் நிலையில் இப்பொழுது தங்களுக்கு எழுந்திருக்கும் ஆபத்துக்குரிய நிலைமையைப் பெரும் கவலையோடும் ஆழ்ந்த யோசனையோடும் நோக்க வேண்டியதாக இருக்கின்றனர். அந்நியர் ஆட்சியினின்றும் விடுதலையடைந்த எங்கள் இலங்கைத் தாயகத்தில் எல்லோரும் சமம் என்னும் கொள்கை வாய் வேதாந்தத்தளவிற் பயனற்றிருப்பது மல்லாமல், செயலளவில் அந் நெறிக்கு முற்றும் மாறான வகையில் அரசு நடத்துவோர் அன்றன்றைய அதிகார அலுவல்களில் தமிழ் பேசும மக்களின் வாழ்க்கைக்கும் அவர்களின் மொழிக்கும் பண்பாட்டிற்கும் பங்கம் விளைக்கக்கூடிய 'வகையில் மறைமுகமாகவும் நயவஞ்சகமாகவும், ஆதிக்கம் செலுத்தி வருகின்றார்கள்.

தமிழ் மொழி வழங்கும் பெரும் இனத்தைத் தாக்கிக்கொண்டிருக்கும் பேராபத்தான இவ் வேளையில் பாராளுமன்றத்து அங்கத்தவர்களும் பல்வேறு அரசியற் கட்சித் தலைவர்களும் ஏனைய சமூக வழிகாட்டிகளும் தங்களுக்குள் யார் தலைவர், எக் கட்சி முக்கியமானது என்று வாதாடி வாய்ப் போராடி மலைகின்றனர் என்பதைப் பார்க்கும்பொழுது இளைஞர்கள் இதயம் அலமருகின்றது.

இன்னமும் அரசியல் ஆதிக்கக் கட்சியினர் வரிசையில் நின்று அவர்கள் அன்னாரை நயந்து வியந்து அவர்கள் செயல்கள் எம இனத்திற்கு எவ்வித இடையூறு விளைவிப்பதெனினும நாமும் சம்மதமென்று அதிகார வேட்கையினால் தமிழகத்தை மறந்துவிடும் தலைவர்களும் இல்லாமல் இல்லை. சுருங்கச் சொல்லுகில் அரசியற் பெருந்தன்மை வரவரச் சிர்குன்றிக் குலைகின்றது; தமிழினத்தின் வருங்காலநிலைமை கவலை என்னும் கார் இருளினாலும் அபாயமென்னும் அந்தகாரத்தினாலும் பயங்கரமாகத் தோற்றுகின்றது. எனினும் உள்ளத்துணர்ச்சியும் ஊக்கமும்படைத்த இளைஞர்கள் இந்தக் கவலையை — இந்த அபாயத்தை நீக்குவதற்கு எழுந்து இயங்கி ஒருங்கு சேர்ந்து தொண்டாற்றும கடமைப்பாடுடையவர்களாகின்றார்கள்.

இந்த நிலைமையிலே இலங்கைவாழ் தமிழினத்தின் எதிர்கால எழுச்சிக்காக இளைஞர் ஐக்கிய முன்னணி இயக்கம் தோன்றியிருக்கின்றது. தாய் மொழிப்பற்றும் தன்மான உணர்ச்சியும் தமிழ்ப்பண்பாட்டுப்பெருமையும் உள்ள அபிமானிகள், அன்பர்கள் இம் மாபெரும் பணி நன்முறையில் நடைபெறவும் நாடு நல்வழிப்படவும் எடுத்த கருமம் இனிது எய்தப்படுவதற்கும் இறைவனை எண்ணி இயன்றளவு பொருளுதவிபுரிந்து தொண்டாற்றும்படி இளைஞர்களின் ஏகோபித்தகுரல் சங்கநாதம் செய்து வேண்டுகின்றது.

இளைஞர் ஐக்கிய முன்னணியின் இலட்சியமும் இயங்கு நெறியும்

1. இலங்கை எங்கணும் தமிழும் சிங்களமும் அரச அலுவல் மொழிகளாக்கப் படக்கூடியதாக அரசியல சட்டம் திருத்தப் படல் வேண்டும்.

2. எந்த ஒரு மாகாணத்திலாவது குடியேற்றத் திட்டம் செய்கையில் வருவதாயின் அந்த மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு முதலிடம் கொடுத்தல் வேண்டும்.

3. தமிழ்பேசும் மக்களெல்லோரும் தங்கள் கட்சி வேறுபாடுகளை மறந்து மேற் குறிப்பிட்ட இலட்சியங்களை ஈட்டிக்கொள்ள ஒன்றுசேருதல் வேண்டும.

---

### மொழிக் கொள்கைபற்றித் தமிழ்ப் பிரதிநிதிகள் செயல்

—o—

இரு மொழிகளும் இருந்தபடியே அரசகரும மொழிகளாக இருக்கும் என்று முதல் மந்திரி சேர். ஜோன் கொத்தலாவல பாராளுமன்றத்திற் கூறியபின்பு சிங்களமே தனி மொழியாயிருத்தல் வேண்டும் என்ற ஸ்ரீ. டி. சி. டபிள்யு. கன்னங்கர கொண்டு வரும் பிரேரணை தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு மனக் குழப்பத்தை உண்டாக்கி விட்டமையால் இவர்கள் யாவரும் இதுபற்றி ஆலோசிப்பதற்கு ஒருமித்துக் கூடுவார்களாம். முஸ்லிம்கள் உட்படத் தமிழ் பேசுவோர் யாவரும் ஒரே மனத்தராய்ச் சிங்களத்துடன் தமிழும் அரசகரும மொழி ஆதல் வேண்டுமென்று திருத்தப் பிரேரணை ஒன்று கொண்டு வருவார்களென்று கூறப்படுகின்றது.

ஸ்ரீ. கன்னங்கரவின் பிரேரணையை வைத்திய கலாநிதி எம். சி. எம். கலீல் எதிர்ப்பதாகக் கூறியிருக்கின்றார் என்றும் அறிய வருகின்றது.

---

### மகாஜனக் கல்லூரி மண்டப அத்திபார விழா

இவ்விழா 20-10-1955 வியாழக்கிழமை இரவு ஆரம்பமாயிற்று. ஆரம்பத்திற் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குச் சென்று அங்கு ஒரு விசேட அபிஷேகமும் பூசையும் நடத்தினார்கள். பின்னர் இரவு ஒரு மணியளவில் மந்திரரூபமாக எடுக்கப்பட்ட ஓம அக்கினியின் முன்னிலையில் ஆக்கிய அட்ட சங்குகளையும், அத்திவாரத்திற்குரிய மற்றைய மங்களப் பொருள்களையும் பலவித மணிகளால் அலங்கரிக்கப்பட்ட விமானத்தில் வைத்து மேள வாத்தியங்களுடன் ஊர்வலமாக வந்து இரண்டரை மணியளவில் அத்திவாரமிடும் நிலையத்தை அடைந்தார்கள்.

அங்கு கல்லூரியில் உள்ள நடேசர் படத்திற்குப் பூசை செய்து வேண்டிய பிற கிரியைகளின்பின் அத்திவாரம் இடப்பெற்றது.

இம் மண்டபத்தை ஏறக்குறைய ஒன்றரை இலட்சரூபாய் செலவில் அமைக்கத் திட்டம் இடப்பட்டுள்ளது இப் பெறுமதிக்கு மூலாதாரப் பணம் அண்மையில நடைபெற்ற அதிர்ஷ்டலாப சீட்டிலும் (களியாட்ட விழாவிலும்) பெற்றவருவாயேயாம். இக் கல்லூரி 1910-ம் ஆண்டில்திருவாளர் T.A. துரையப்பாபிள்ளை அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

---

### மட்டக்களப்புக்கச்சேரி உதவி அதிபர்

மட்டக்களப்புக்கச்சேரிக் காரியாலய உதவியாளராக புதிதாகநியமிக்கப்பட்டிருக்கும் திரு. என். பி. ஜெகநாதன் ஸி ஸி. எஸ். அவர்கள் கடமையேற்கும் வரை அந்த ஸ்தானத்துக்கு, தற்போது மேலதிக காரியாலய உதவியாளராக இருக்கும் முகாந்திரம் பெ. சுப்பிரமணியம் அவர்களை ஐப்பசி 1-ம் திகதியிலிருநது கடமையாற்றும்படி பகிரங்க சேவைக் குழு (கமிஷன்) நியமித்திருக்கிறது. பிரதம லிகிதரான திரு. ரி ஈ. ஜேஸப் அவர்கள் தற்காலிக மேலதிக காரியாலய உதவியாளராகவும், திரு. என். தம்பிப்பிள்ளையவர்கள் பிரதம லிகிதராகவும் தற்போது கடமையாற்றுகிறார்கள்.

இப்பொழுது அவரின் மகன் திரு. T. T. ஜெயரத்தினம் அவர்களின் தலைமையில் ஆயிரத்து இருநூறு மாணவர் நாற்பத்தைந்து ஆசிரியர்களால் கற்பிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் உயர்தரக் கல்லூரிகளில் ஒன்றாக விளங்குகின்றது.

---

### சைவ சித்தாந்த இலவச வகுப்பு

மேற்படி வகுப்பு 25-10-55 விஜய தசமியன்று நாவலர் சைவபிரகாச வித்தியாசாலையில் ஆரம்பமாயது.

சைவசமய மக்கள் சாஸ்திர நூல்களை நன்கு கற்கவேண்டும். தன் சமயம் இன்னது என்பதை விளங்காதவன் சைவன் அல்ல. இப்பொழுது சமய சாஸ்திர நூல்களைக் கற்போரின் தொகை மிகக் குறைவடைந்து போகின்றது. எனவே எல்லோரையும் உற்சாகப்படுத்துங்நோக்கமாகவே இன்று இவ்வகுப்பு ஆரம்பமாயது. அதுவும் சைவமும் தமிழும் வாழத் தியாகப் பணி புரிந்த நாவலர்பெருமான் ஸ்தாபித்த சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பித்தது மிகப் பொருத்தமானது எனச் சைவசமயப் பிரசாரகர் திரு. பொ. அப்புக்குட்டி அவர்கள் கூறி விசேட பூசை ஆராதனையுடன் வகுப்பு ஆரம்பமாயது. இவ்வகுப்பின் ஆசிரியர் சைவப் பெரியார் திரு. சி. நாகையா B A. அவர்கள். அன்று வயது முதிர்ந்த பெரியோர்கள் பலரும், இளம் ஆசிரிய மாணவர்களும் வகுப்பிற் கலந்து கொண்டனர். ஒவ்வொரு ஞாயிறுதோறும் காலை 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். வேதனம் இன்றி இலவசமாகவே படிப்பிக்கப்படும. இவ்வரிய தருணத்தில் எல்லோரும் படித்துப் பயன் பெறுவது மிக நன்று என ஆசிரியர் திரு. C. நாகையா அவர்கள் கூறினர்.

---

# பழமை மறந்து புதுமை மோகம் பூத்த நிலைமை

—————:o:—————

## மாதர் மதிப்பு ஓங்கி மனையறம் சிறக்கச் செய்ய வேண்டியது என்ன?

"தொட்டிலிற் பூண்ட குணம் சுடுகாடு மட்டும்" என்பது முதுமொழி வாழும் பிள்ளையென்றால் அதை மண்விளையாட்டிலே தெரியுமென்பார்கள். வளரும் பயிரென்றால் அதை முளையிலே தெரியுமென்பார்கள். இவையெல்லாம் எம் முன்னோர் கண்ட பொன்னான அனுபவ அறிவுரைகள் - பொக்கிஷங்கள். இன்று நம் நாட்டிலே எம்மவர் வாழ்க்கை முறைகளை நோக்கினால் எவருக்கும் ஒரு ஆச்சரியத்தை உண்டுபண்ணுவனவாகவே இருக்கும். பழமையெல்லாம்மறைநது புதுமை மோகம் பூத்து குலுங்குகின்றது. இன்றைய மக்கள் வாழ்க்கையில பழந் தமிழ்ப் பண்பாடு — ஒழுக்கம் - கலாசாரம் - நாகரீகம் - வீரம் என்பனவெல்லாம் அருகிவிட்டன! ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமேனன்ற குரல் ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது. இல்லறத்தின் மாண்பினை உணர வேண்டும். இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை என்னும்கருத்துக்கு இலக்கணமாக வாழ முன்வரவேண்டும் உயர்ந்த எண்ணங்கள், அடக்கம், பொறுமை, அன்பு, தொண்டு, பரநலம், வீரம் முதலானநற்பண்புகள் அமைய வாழவேண்டும். அப்பொழுதுதான் மாதர் இனத்தின் மதிப்பு ஓங்கும் மனையறங்கள் சிறக்கும்; மனுநீதி விளங்கும். "பெண்ணிற் பெருந்தக்க யாவுள? கற்பெனுந் திண்மையுண்டாகப்பெறின்" என்னுந் தெய்வீக மொழியின் உண்மை ஒளி வீசும்.

பெண்கள்வாழ்வு சிறக்க இல்லறம நல்லறமாகமிளிர சமூகம் சிறந்து முன்னேற, மாதர் மன்றங்கள், மங்கையர் கழகங்கள் மிகமிகத் தேவை. ஊர்கடோறும் மங்கையர் மன்றங்கள் நிறுவப்படவேண்டும். அம்மன்றங்களில் அரிவையர் அனைவோரும் அங்கத்துவம் பெறச் செய்யவேண்டும். மன்றத்தின் மதிப்புக்குரிய கட்டுப்பாடுகளையும் - விதிகளையும் அனுசரித்து வாழ்க்கையிற் கடைப்பிடித்தொழுக முயற்சியெடுக்கவேண்டும். மணமாகுமட்டும் மதிப்புடன் மன எழுச்சியுடன் சேவை செய்துவிட்டு மணமானதும் எனக்கென்னவென்று எண்ணாது பெண்ணினத்தின் பெருமையையும், உரிமையையும், பேண - நிலைநாட்ட ஒவ்வொரு நங்கையரும் நற்றொண்டாற்ற வேண்டும்.

பிறநாட்டு 'நாகரீகங்கள்' வந்து நம் நாட்டில் தாண்டவ மாடுவதைத் தடுக்க, உண்மை யுணர்ச்சியுடன்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் - சிங்கள சம அந்தஸ்து

## நல்லெண்ணத்துடன் ஆதரிக்கும் எதிர்க்கட்சித்தலைவர்வேண்டும்

## தமிழ்த் தலைவர்களுள் ஒருவர் தலைவராதல் தற்பொழுது சாலச் சிறந்தது

ஈழத் திருநாட்டிலே வாழும் எண்ணற்ற மக்கள் பேசும் இனியமொழிகளாக — பழைய மொழிகளாக — அவர்களின் தாய்மொழிகளாக — இலங்குகின்ற மொழிகள் 'தமிழும் - சிங்களமும்' ஆகும். சுதந்திரம் பெற்ற ஈழத்திலே இந்நாட்டு மக்கள் பேசும் மொழி — அவர்களது தாய்மொழி அரசவரிசை பெற வேண்டும். தாய்மொழிகளே அரியாசனத்திருந்து அரசோச்ச வேண்டும் — அவர்களது தாய்மொழியிலே அவர்கள் பேசும் மொழியிலே அரச கருமங்கள் அனைத்தும் நடைபெற ஒழுங்குகள் உருவாகவேண்டும்; என்று சுதந்திர ஆர்வமும் தாய்மொழி அபிமானமும் தன்மான உணர்ச்சியும் உடையவர்கள், உரைத்துக்கொண்டு வரும் இந்நாட்களிலே குறுகிய மனப்பான்மையும், வகுப்புக ஆவேஷமும், 'ஒரு மொழி — அதுதான் எம் ஒப்பற்ற சிங்கள மொழி' என்று ஓலமிட்டுக்கொண்டும் — சாகும்வரை உண்ணா நோன்பு அநுட்டிப்போம் — மொழிக்காக உயிரைக் கொடுக்கக்கூடத் தயங்க மாட்டோம் என்றும் உணர்ச்சியிழந்து ஒருபாற் கோடி உலக நீதிக்கும் — சனநாயக தர்மத்துக்கும் ஒவ்வாத கருத்துக்களைச் சொல்லிலும் செயலிலும் சோர்வுறாது ஊக்கமுடன் காட்டி நாட்டில் வகுப்புவாதத் தீயைக் கொழுந்துவிட்டெரியச் செய்து வேடிக்கை பார்க்கும் விருப்பத்தில் 'மஞ்சள்' அங்கி அணிந்த மதிப்புக்குரிய — மாண்புமிக்க பௌத்த மதக்குருமார்களும் சிங்கள அரசியல் தீர்க்கதரிசிகளும் — பிரபல பிரதிநிதிகளும் — 'எக்கதிநேரிலும் கொண்ட இலட்சியம் விடோம்'' என்று கூறும் வகையிலே ஒரு மொழிப் பிரசாரம் — ''சிங்களமே'' இலங்கையின் அரசவரிசை பெறவேண்டும் என்று விளக்கங்கள் வெளியிடுவது சனநாயக தர்மத்தில் நம்பிக்கையுடையவர்களுக்கும் நாட்டின் நற்பெயரில் அக்கறையுள்ளவர்களுக்கும் சமாதான வாழ்க்கையை விரும்புவோருக்கும் பெரும் வருத்தத்தை உண்டுபண்ணுவது இயற்கையே.

தமிழுக்கும் — சிங்களத்துக்கும் 'சம அந்தஸ்து' அளிக்கப்பட வேண்டும். சிறுபான்மை மக்கள் கொண்டுள்ள பீதியையும் - அச்சத்தையும் அகற்றி, அரசியற் சட்டத்தில் திருத்தம் ஏற்படுத்தி நம்பிக்கையும் நல்லெண்ணமும் பொலிய — பொது மக்கள் ஒற்றுமையாக வாழ வழி அமைப்பது, பொறுப்புணர்ச்சியுள்ள அமைச்சர்களதும் அரசியல் ஞானிகளதும் தலையாய கடமையும் பொறுப்புமாகும். அரசாங்கக் கட்சிக்கு ஒரு உண்மையான எதிர்ககட்சி — ஜனநாயக தர்மத்தின் மதிப்பை உயர்த்தும் ஓர் எதிர்க்கட்சி அமைவது மிக மிக அத்தியாவசியம் ஆகும். அத்தகைய சிறப்புப் பொருந்திய ஒரு எதிர்க்கட்சிக்குத் தலைமைதாங்கும் பொறுப்புடைய எவரும் உண்மை - நேர்மை - தொண்டு - நீதி - நியாயம் - என்பன அமையப்பெற்றவராக இருக்கவேண்டும்என்பதைச் சொல்லவும்வேண்டுமா? எனவே, நம் இலங்கையில் இன்று எந்தத் திக்கிலும் தமிழுக்கும் — சிங்களத்துக்கும் 'சம அந்தஸ்து'' அளிக்கப்பட வேண்டும். வாய்ப் பந்தல் போடுவதனால் சிறுபான்மையினரின் அச்சமும் - பீதியும் அகலாது சட்டத்திலே - 29 வது பிரிவிலே 'இலங்கை எங்கணும் - தமிழும் - சிங்களமும அரச மொழிகளாக இருக்கும்'' என்று திருத்தம் ஏற்படுத்தி - திருப்தியும சமாதானமும் நிலவ, நேர்மையுடன் உழைக்க-தமிழ்த் தலைவர்களும்-சிங்களத தலைவர்களும் ஒத்துழைத்து - மக்கள்மன்றத்திலே-அரச சபையிலே-அறிவுரை கூறி — சட்டத்தில் திருத்தம் ஏற்படுத்த உண்மையாக உழைத்து வருகின்ற இச்சந்தர்ப்பத்திலே — இலங்கைப் பாராளுமன்றத்திலே — எதிர்க கட்சியின் தலைவராக விளங்கும், திரு. S W.R.D. பண்டாரநாயக அவர்கள் — தமிழர்கள் அச்சங்கொள்ளத் தக்க வகையிலே பேச்சுகள் நிகழ்த்துவதும் — உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசுவதும் ஒரு பெரும் ஆச்சரியத்தையும — அச்சத்தையும் கொடுக்கின்றதே! மொழி விடயத்தில் விட்டுக் கொடுத்தால் — மத விடயத்திலும் சங்கடங்கள் உண்டாகும் என்றவகையிலும் — சிங்களத்தின் பெருமையில் அக்கறைகொண்டு கருத்துக்களைக் கபடமில்லாது வெளியிட்டுவரக் கண்டும் — ஒருமொழி அபிமானத்திலே ஊறியிருந்து கொண்டு ஊருக்கு உபதேசஞ் செய்வது வேறோர்விதமாக இருப்பதை அறிந்தும் — எதிர்க் கட்சியினர் ஒரு மொழித் தலைவரை எதிர்க் கட்சித் தலைவராக வைத்துக் கொண்டிருப்பது பெரும் வெட்கமானதொரு செய்கையாகும். இருமொழிக்காக - உண்மையுணர்ச்சியுடன் உழைக்கும் தலைவர்கள் எதிர்க கட்சியில் இல்லையா? திரு. பீட்டர் கெனமன் அவர்களோ — கலாநிதி திரு. என். எம். பெரேராவோ, எதிர்க் கட்சித் தலைவராகத் தெரிந்தெடுக்கப்படலாம். அல்லது இலங்கையிலே சிறுபான்மையினர் பிரதிநிதிகளுக்கும் சிறந்த இடம் — தகுந்த இடம் அளிக்க, நய சிங்களப் பிரதிநிதிகள் தயங்க மாட்டார்கள் என்பதைச் செயலில்காட்டி நம் தமிழ்ப் பெரு மக்களின் நல்லெண்ணத்தையும் பெற — தமிழர் மாநாட்டுத் தலைவர் திரு. ஜீ. ஜீ பொன்னம்பலம் அவர்களையோ — அல்லது தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. கு-வன்னியசிங்கமவர்களையோ, அல்லது வவுனியாப் பிரதிநிதி திரு. சி. சுந்தரலிங்கம் அவர்களையோ உடனடியாக எதிர்க்கட்சித தலைவராகத் தெரிந்தெடுகக ஒரு மொழிக்காக ஓலமிடும் உத்தமர்களை நீக்க — சனநாயகத்தை வளர்க்கும தலைவர்கள் - சிறுபான்மையினரின் நியாயமான கோரிக்கைகளை எடுத்து விளக்கி நாட்டில் இரத்தக் களரியும் வகுப்புவாதமும் தலைவிரித்தாடாவண்ணம் தடுகக — எதிர்க்கடசிககுப் புதியதலைவர் ஒருவர் — சம அந்தஸ்தை ஆதரிக்கும் ஒருவர் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். தமிழர்களின் பிரதிநிதிகள் ஒரு சில நாட்களுககாவது எதிர்க்கச்சித் தலைவராயிருந்து — தாய்மையை வாய்மையாகக் கொண்டு — தொண்டாற்ற முன்வர, சம அந்தஸ்துக் கோரிக்கை வெற்றி பெறும் என்பது உண்மை. எதிர்க் கட்சித் தலைமைப் பதவியைத் தமிழ்ப் பெருமக்கள் கையிலும் ஒருசில பொழுதுககாவது கொடுத்துச் சிறுபான்மையினர் நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக்கொள்ள தேசத் தொண்டர்கள் — தியாக சீலர்கள் — முன் வருவார்களா? இருமொழிப் பிரசாரஞ் செய்வோர் ஏதும் நடவடிக்கை எடுத்துத் தடுக்க ஆவனவற்றைச் செய்ய வேண்டும. அப்போதுதான் பொதுமக்கள் எதிர்க் கட்சியில் நம்பிக்கை வைப்பர்.

இங்ஙனம்

கா. இரகுநாதன்

அம்பாள்வீதி, நாயன்மார்கட்டு
யாழ்ப்பாணம், 25-10.55.

# சம அந்தஸ்து இன்றியமையாதது

## தமிழ் மக்களின் மனநிலைமை பற்றி சேர். கந்தையாவின் திடமான கூற்று

கைத்தொழில் வீடமைப்பு சமூக சேவா அமைச்சர் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் கொழும்பு ''கியு, லங்கா கிளப்'' பில் தமிழும் சிங்களமும் அரச கருமமொழிகளாதல் பற்றி எதிர்க்க முடியாத எடுத்துக் காட்டுகளுடன் சிறந்த சொற்பொழிவொன்றாற்றினர்.

1944-ம், 1945-ம, 1949-ம் ஆண்டுகளில் இலங்கையின் முதற்பிரதம மந்திரி ஸ்ரீ டி. எஸ். சேனநாயக அவர்கள் அரசாங்க சபையிலும் வெளியேயும் தமிழும் சிங்களமும் அரச கருமமொழிகளாயிருப்பதே முறை எனப் பெரிய பேச்சுக்களை எடுத்துக் காட்டி ஆட்சிப் பகுதியிலும் கல்வித்துறையிலும் அக் கொள்கையின்படியே கருமங்கள் நடந்து வந்தன வென்று நிரூபித்து எந்த நியாயத்தின்படியும் இரு மொழிகளுமே அரச கரும மொழிகளாதல் வேண்டுமென்று வற்புறுத்தினர்.

அவர் மேலும் பேசும் போது சனநாயக ஆட்சி என்பது சிறுபான்மையினர் உட்பட நாட்டு மக்கள் எல்லோருடைய சம்மதத்தின்படியே நடக்க வேண்டியது ஒன்று. அவ்வாறில்லாது பெரும்பான்மையினர் ஆட்சி என்பது எவ்வாற்றானும் நடக்க முடியாது. நான் அடிபட்ட அரசியல்வாதியல்லனேயெனினும் நாட்டு வழ்க்கையில் வேரூன்றி உறைந்து நின்று நிலைத்த ஒருவனாகலின் தமிழ் மக்களின் மனநிலைமையை நன்கு அறிந்து சொல்லக்கூடியவனாயிருக்கின்றேன். ஆகையினாலே நாட்டில் தங்கள் நிலைமைத் தொடர்பிலோ தங்கள் மொழித் தொடர்பிலோ இந்நாட்டில் இரண்டாம் படியில நிற்க எககாலத்திலாயினும் தமிழ் மக்கள் சம்மதிப்பார்களென்றாவது யாராயினும் நினைப்பது புத்தியீனமானதென்றும் உண்மைக்கு விரோதமானதென்றும் நான் கூறுதல் ஒருபோதும் கற்பனைக் கதையாகமாட்டாது.

சாதாரண மக்களின் தெருக்கூட்டத்திலாயினும் என்ன கற்றோர் சபையிலாயினும் என்ன அபிமான வேகம் எழுப்பப்பட்டிருக்கும்பொழுது நாம் எடுத்தாளக்கூடிய எல்லா வழிகளாலும் அமைதியை உண்டாக்கவேண்டும. அமைதியுடன் நன்காராய்ந்து மக்கள் வாழ்க்கையின் சிறந்தபண்புகளை நாம் எடுத்தாள வேண்டிய நிலைமை ஒன்று இப்பொழுது ஏற்பட்டிருக்கின்றது.

சிலர் மனங்களில் சனநாயக ஆட்சி என்றால் பெரும்பான்மையோர் ஆட்சி என்ற பிழையான கருத்து வேரூன்றிவிட்டது. அப்படியானால் ஒரு நாட்டின் சிறுபான்மைச் சமூகம் சில சர்வாதிகார நாடுகளில் நடப்பதுபோல் அமிழ்த்தப்பட்ட பொழுதும் அந்த ஆட்சி சனநாயகம் என்ற பெயரால் அழைக்கப்படுவதை ஒக்கும். சம அந்தஸ்து என்பது சிலருக்கு உட்கொள்ளமுடியாது விக்கிக்கொள்ளும் தன்மையதாயிருக்கின்றது. சம அந்தஸ்தினால் ஆட்சிமுறையில் எண்ண முடியாத நிலைமைகளுண்டாகுமென்பதாயும் சிங்கள மொழி அழிந்து போகும் என்பதாயும் சிலர் கற்பனை செய்து கொள்வதைக் கண்டு நான் அதிசயப்படுகின்றேன். அவர்கள் நினைப்பதுபோல் அல்லாது நாட்டு மக்களின் தேவைக்குத் தக்கவாறு நாளடைவில் வேண்டிய ஒழுங்குகளை நாம் அமைத்துக் கொள்ளலாம். நல்லெண்ணமும் அமைதியும் உண்டானால் ஆட்சிமுறையில் வரும் எநத இடைஞ்சலையும் நீக்கிக்கொள்ளலாம் என்று கூறினர்.

### அணிந்துரை அரங்கம்

**சரசுவதி இலக்குமி தோத்திரம்**

இது, கம்பர், சுப்பிரமணிய பாரதியார், குமர குருபர சுவாமிகள் ஆகியோருடைய பாடல்களிலிருந்தும் விபுலானந்த அடிகள் ஆசிரியர் திரு. மா பீதாம்பரம் முதலியோர் பாடிய பாடல்களிலிருந்தும் தொகுக்கப்பெற்று சாவகச்சேரி தாயுமாணவர் திருமுறைக் கழகத்தால் நவராத்திரி வெளியீடாய் வெளியிடப்பெற்றது தொகுக்கப்பெற்ற பாடல்கள் பொருட்சுவையோடு பக்தியூட்டும் தன்மையவை, நவராத்திரி காலத்தில் நனிவிரும்பிப் படிக்கத்தக்கவை.

பிரதிசதம் 25.

பெறுமிடம்: தாயுமாணவர் திருமுறைக் கழகம் (எச். எல். எஸ்.) ''யாழ் அகம்'' சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் இல. 11864.

காரைநகர் வடக்கு. பொன்னம்பலம் கைம்பெண் சிவக்கொழுந்து, —வழக்காளி.

எதிராக.

1. காரைநகர் மேற்கு. செல்லையா சதாசிவம்,
2. ஷையூர் செல்லையா கைம்பெண் பாழுபதிப்பிள்ளை,
3. காரைநகர் கிழக்கு. சின்னக்குட்டி இராமநாதன். —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11864-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955 ௵ கார்த்திகை ௴ 26ம் திகதி சனிக்கிழமை முறபகல் ஒன்பது மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா. 5672-ம், ரூபா 4000-க்கு 28-10 54 தொடக்கம் 5-4-55வரை 6 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா. 305 69 சதம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோயிற்பற்று தங்கோடை இறை, "ஓலைதூக்கி' பர கி. இலா, பதிலைகால் (பர கி. இலா. 14¼.) பனைகள் வடலிகள் தென்னைகளும் வீடுகளும் கிணறும், எல்லை: கிழக்கு, சுப்பிரமணியர் தம்பையாவிற்குரிய வாதனம். வடக்கு, செல்லையாமகள் சிவகாமிப்பிள்ளைக் குரியவாதனம். மேற்கு, சின்னத்தம்பி பொன்னையாவின் உரிமைக்காருக்கும் வயித்திலிங்கம் பெண் தெய்வானைப்பிள்ளைக்கும் உரிய ஆதனங்கள். தெற்கு. ரேட்டு. இதடங்கலும். ஆனால் தெற்கெல்லையான ரேட்டிலிருந்து இதன் கிழக்கெல்லையருகாக வடக்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல 11669.

யாழ்ப்பாணம் பெரியதெரு அலோசியஸ் மரியாம்பிள்ளை —வழக்காளி,

எதிராக,

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி ரேட்டு.
1, பாவிலுப்பிள்ளை பிலிப்,
அல்லது திசை.
யாழ்ப்பாணம்கொன்வென்ற்ரேட்டு நம்பர் 8.
2. யோசேப்பு மரியாம்பிள்ளை

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11669-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1955 ௵ மார்கழி ௴ 1 ௨ வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளிக் கோயிற்பற்று கொழும்புத்துறை இறை ஒடைவளவு நி ப 12½ யும் கிணறும் பயிர்வகைகளும். எல்லை: கிழக்கு ஒழுங்கை, வடக்கு, சின்னத்தம்பி சுந்தரத்துக்கும் பங்காளருக்குமுடைய வாதனமும், மேற்கு, எம் சீதம்பரியினுதனம். தெற்கு. கதிரன் சண்முகத்தினுதனம், இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி,
கொமிஷனர்.

நம். 51, நாலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம் 1-11-55
M 177. 4-11 (ரு 200)

செல்லைக் காணிக்கு போககுவரவு செய்யும் எட்டுமுழவகலமான வழிப் பாவிப்புரித்தும் குறித்த கிணற்றில வடக்கெல்லைக் காணிக்குரிய தண்ணீர்ப் பங்கும் பிற நீகைல.

1955-ம் ௵ புரட்டாசி ௴ 29-ம் திகதி.

வை ஏரம்பமூர்த்தி.
கொம்மிஷனர்

M 174. 4-11 (ரு. 300)

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

நவாலியிலிருந்து போய் தற்போது கொழும்பிலிருக்கும் கொழும்பு இராஜரத்தினம் பத்மநாதன்
இல M. B. 121

வழக்காளி

எதிராக

சண்டிலிப்பாய்

1 இராசரத்தினம் விசுவநாதனும் பெண்
2 பரமேஸ்வரியும்

எதிராளிகள்

யாம்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 121 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955 ௵ மார்கழி ௴ 13௨ செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் மேற்குப்பகுதி நவாலியிறை இலகடி பா கில இலா 18ம் குளி 16 1/4 ம் இதில் லாந்தா மேஸ்தர் S. முத்துக்குமாரசாமி என்பவரால் தயாரிக்கப்பட்ட 15-8-46 ந் திகதியைக்கொண்ட இல 31/1946 பிளானின்படி மேற்குப்புறமாக கிலப்பரப்பு 10 ம் கல் வீடும் கிணறும் பயிர்வகைகளும் இன்னும் அதற்குச் சேர்ந்தவைகளும் குறித்த 31/1946 இலக்கப் படத்தில் ஒன்று என்னும் துண்டு எல்லை கிழக்கு 2-ம் துண்டாகிய வேலுப்பிள்ளை செல்லப்பாவிற்கும் பெண் அன்னபூரணத்திற்கும் உரிய மீதக்காணி. வடக்கு ஒழுங்கை மேற்கு ஒழுங்கையும் வீரவாகு பெண் நாகரெத்தினத்தின் ஆதனம். தெற்கு V ஜெபேட் இராசநாயகத்திற்கு உரிய ஆதனம்

செ. இரத்தினசபாபதி
கொமிஷனர்

நம் 51, 4ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம் 1-11-55
M 176 4 11 (ரு 200)


௨

## சைவ பரிபாலனசபையின் தினவரவு இடாப்பு

எல்லாக் கல்விச்சாலைகளிலும் கல்லூரிகளிலும் நன்கு உபயோகிக்கக்கூடியது. புதிய முறையில் சிறப்புற அமைக்கப்பெற்றது.

வண்ணார்பண்ணை சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

## பாலகதாவாசகர், 3-ம், 4-ம் பகுதிகள்

வித்தியாபகுதியாரின் விதிகளுக்கமைய மூன்றும் நான்காம் வகுப்பு மாணவருக்கு, கூடுதலான இரண்டாவது வாசக புத்தகமாய் உபயோகப்படுமாறு மேற்படி வாசக புத்தகங்களின் புதிய பதிப்பொன்று சிறந்த முறையில் வெளிவந்திருக்கின்றது.

ஆக்கியோர்:

ஆசிரியர், திரு. T. P. கைலாசபதி,
பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை.

வண்ணார்பண்ணை, சைவப்பிரகாச யந்திரசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

M. 170. 4-11. 11-11


## இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி

### புகையிரதக் கடவைத் திருத்தங்கள்

வடபாதை, பளை கொடிகாமமாகிய புகையிரத நிலையங்களுக்கிடையில் 231 மைல் 1 சங்கிலி 51 லிங்ஸ் அடியில், கச்சாய் வீதியைச் சந்திக்கும், புகையிரதக் கடவை 9-11-55 மாலை 6 மணி தொடக்கம் மறுநாட் காலை (10-11-55) 6 மணி வரைக்கும் திருத்தப்படும்.

இக்கடவை 9-11-55 மாலை 10 மணி தொடக்கம் மறுநாட் காலை 6 மணி வரைக்கும் பொதுசன வீதி போக்குவரத்து வாகனங்களுக்கு முழுமையாக மூடப்பட்டிருக்கும். இவ்வேளையில் போக்குவரத்துசெய்யக்கூடிய மறுபாதை சாவகச்சேரியிலிருந்து வரும் பாதை.

G. 40 4—11.

## தேவை

தமிழ் J.S.C வகுப்பு வரை ஆங்கிலமும் படிப்பிக்கத் தகுதியுள்ள டயிற்றப்பட்ட சைவ ஆசிரியை ஒருவர் 1-12-55 தொடக்கமாக மேலைப் புலோலிச் சைவபாலிகா பாடசாலைக்கு வேண்டும். 22—11—55க்கு முன் விண்ணப்பஞ் செய்யவேண்டும்.

மனேஜர்

மேற்படி வித்தியாசாலை
பருத்தித்துறை

31—10—55
M, 172. 4-11.

## உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

### இருவாரப் பலன்கள், 6—11—55 —— 12—11—55

**மேடராசி அசுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

குடும்பக் கருமங்கள் அளவில் ஒரு குழப்படியான வாரம். உமக்கு மனச் சமாதான மிருக்கமாட்டாது. புது முயற்சிகள் கவனமாய்க் கையாளப்படவேண்டும். காசுக் கருமங்களுக்கு வார இறுதி நல்லது.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

புது முயற்சிகளுக்கு நல்லவாரம். காணிகள் காணிப் பொருள்கள் மூலம் இலாபங்கள் நிச்சயம வார இறுதியில் தேக சுகம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது.

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம 1,2,3**

சுகவீனங்களுக் கிடமுண்டு ஒன்றில்லாவிட்டால மரணெறுறைப் பற்றி நீர் துன்பப்பட்டுக்கொண்டிருப்பீர். பண நிலைமை திருந்துவது நிச்சயம். ஆனல் நீர் பெறுவது எதையும் செலவழித்துவிடுவீர்.

**கடகராசி புனர்பூசம் 4ம பாதம பூசம் ஆயிலியம்.**

உத்தியோகத் துறையில் இது ஒரு நல்ல வாரம். புது முயற்சிகள் மிக நல்ல சித்தியடையும. ஆனல் குடும்பச் சூழலில எல்லாம் நல்லாயில்லை. இனத்தவர்கள் சண்டை தொடுப்பவர்களாயிருப்பார்கள்.

**சிங்கராசி மகம், பூரம், உத்தரம, 1ம் பாதம்.**

சகோதர சகோதரிகள் இந்த வாரம் அதிகம் உதவியாயிருப்பர் உம்முடைய புது முயற்சிகளில் நீர் சித்தியடைவது நிச்சயம். ஆனல் வேலை கூடுதலாயிருக்கும்.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம பாதம.**

உம்முடைய நண்பர்கள் இனத்தவர்களுடன் இந்தவாரம் சண்டை தொடுக்க நீர் முந்துவீர். செலவு கூடுதலாயிருக்கும். உத்தியோகத் துறையில் நல்ல வாரம். ஆனல் உடனே பணம் பெறுதற்கான அறிகுறியில்லை.

**துலாமசித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம 1,2,3ம் பாதம்**

தேகசுகம் இந்தவாரம் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது. புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும் ஆனல தொடக்கத்தில் அதிக எதிர்ப்புகளையும் கண்டனங்களையும நீர் முன்னிட வேண்டி வரும். வார இறுதி சில நல்ல புதினங்களைத் தரும.

**விருட்சிகராசி விசாகம் 4-ம பாதம அனுஷம, கேட்டை.**

இந்தவாரம் தேகசுகம் நல்லாயிருக்கமாட்டாது. நண்பருடன் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும் [illegible] துறையில நல்ல வாரம். [illegible] செலவும் அதிகரிக்கும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்**

வாரத்தின்முதலிருநாட்களும்நல்லாயிருக்கமாட்டா சுகவீனங்களுக்கும் கந்தோரில் தொந்தரவுகளுக்கு மிடமுண்டு. வார மிகுதி மிக நல்லாயிருக்கும் உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

**மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

ஒரு தளம்பமான வாரம். முதல் இரு நாட்களும் உம்முடைய உத்தியோக கருமங்களுக்கு நல்லவையாயிருக்கும். செவ்வாயும் புதனும் உம்மை அதிகம் நிலைகுலைக்கும. வாரமிகுதி ஒப்ப நோக்கும்பொழுது ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும்.

**கும்பராசி அவிட்டம் 3, 4 பாதம, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

வியாழன் வெள்ளியும் சனி காலையும் தவிர ஒரு நல்லவாரம. உத்தியோக சித்தியும் புகழும் நிச்சயம். கடைசி இரு நாட்களும் உம்மைச் சிறிது நிலைகுலைக்கும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

பிதாவழி இனத்தவர்கள் மூலம் இந்தவாரம் தொந்தரவுகளுக்கிடமுண்டு. உம்முடைய முயற்சிகள் [illegible] களுக்குமிடமுண்டு.


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ௵ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
6163,13,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சகிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியசகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறாப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.


மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு தானஞ் செய்வாரிற் றலை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மொழிக்கு மொழி தித்திக்கும் திருவாசகம்

## பொருளுணர்ந்து பாராயணஞ் செய்வோர் பாக்கியவான்கள்

### மந்திரமும் தந்திரமுமாய இம்மணிமொழிகளைப் படித்துப் பயனடைதல் சைவவாழ்க்கைமுறை

(சைவத் திருவாளர், திரு. பொன். அப்புக்குட்டி)

இருவினை யின்பமு மெளிதி லாக்கும் சிறந்த நூல் திருவாசகமே! இரக்கத்துக் கெடுத்துக்காட்டாக நிற்பது திருவாசகமே! தில்லைவாழந்தணர்கள் பொருள்கேட்ப திருவாசகப் பொருள் தில்லை நடராசனே என்று கூறப்பெறும் தகுதியும் அருமையும் பெருமையும் அருளும் திருவுமுடைய செம்பொருளாய்த் திகழ்வது திருவாசகமே! மாணிக்கவாசகர் சொல்லச் சொல்ல எம்பெருமான் தமது அருமைத் திருக்கரத்தால் எழுதி யுலகுக்களித்த பெருமை வாய்ந்தது திருவாசகமே! பிற சமயத்தவரும படித்துப் படித்து மகிழ்ந்து வாயூறுவது திருவாசகமே! அதைப் பாராயணம் பண்ணுவோர் பாக்கியவான்கள். பொருள தெரிந்து படிப்போர் புண்ணியவான்கள். மணிவாசகப் பெருமான் இறைவனிடம் சமர்ப்பிக்கும் முறையீடுகள் அளப்பில. ஒன்று பின்வருமாறு.-

> "வெறுப்பன வேசெய்யு மென்சிறு
> மையைநின் பெருமையி னால்
> பொறுப்பவ னேஅராப் பூண்பவ
> னேபொங்கு கங்கைசடை
> செறுப்பவ னேநின் திருவரு
> ளால்என் பிறவியை வே
> றறுப்பவ னேஉடை யாய்அடி
> யேனுன் அடைக்கல மே."

இப்பா அவர் பக்குவ நிர்ணயங் கூறும் அடைக்கலப்பத்தில் ஓர் செய்யுள். அருட்பாக்களுக் குண்மையுரை காண்பவர் அருளாளர்களே. ஆசையுரை காண்பவர் அருளாளர்களே! ஆசை வெட்கமறியாது என்பனமாயினும் இஃது கற்றவர்க்கும் கல்லாதார்க்கும் ஓர் நல்விருந்தாகுமென்பது எம்நம்பிக்கை. எம்பெருமான் புகழ்களைப் பேசிப் பேசி நாவின்பரசமதான ஆனந்தவருவிபாய மணிவாசகர் சுவைக்கும் அமராவன் புணர்ச்சியும் அரன் கழல் செல்லுமார்வமும் அளப்பில. அவர் பெருமானை விளித்து எம்பெருமானே! ஆன்மாக்கள் உய்ந்துபோக அன்பைப் பெருக்கி ஆருயிரைக் காக்கவேண்டுமென்று பெருங் கருணை காரணமாக உடனும் ஒன்றும் வேறும் அத்துவிதமாய் நின்று உபகரிப்பீர்கள். நின்பணி செய்யவே தனுகரண போகங்களை யுதவினீர்கள் அதன் பொருள்தெரிந்தி சிற்றறிவோரீ ஐம்புலனடக்கி அறந் தலைநின்று எவர்களாலும் வெறுக்கப்படும் என சிறுகுணத்தை தங்கள் பெருங் குணத்தால் பொறுத்தருளி இரங்கியருள் என்று "வெறுப்பனவேசெய்யும் என் சிறுமையைநின் பெருமையினால் பொறுப்பவனே" என்றும் பொருது கழித்தால் எனக்குய்விலலை என்றும் தோனறவே தேற்றேகாரம் பொருத்தியும், பால் கொடுத்து வளர்த்தாலும் பாவம் செய்யா தொழியாத பாம்பைப் பாகியிருக்குமவண்ணம் பணித்த பணபுடைய பகவானே வன்பாம்பு மூருடொச்குமென் சிந்தைக்குப் படருந்நறி பணிப்பது தங்களுக்கோர் பொருளன்று என்று தோன்ற "அராப்பூண்பவனே" என்றும் பொங்கிப் பெருகி யுலகை யளிக்கவந்த பேராற்றையடக்கிச் சிறு துளியாக்கித் தங்கள் சிரசில் விளங்க வைப்பது அதன் தீங்கை விலக்கி ஆன்மாக்களை இரட்சிப்பதல்லாமல் அவர்களைப்பற்றிய தொடர்பையும் போக்கி மனோவேகத்தையுங் கெடுத்து அவர்களுக்கு அத்துவித முத்தியாம் நல்வாழ்வளிக்கிற பேருண்மையைப் புலப்படுத்தப் "பொங்கு கங்கைசடை செறுப்பவனே" என்றும், சுவாமி! தாயானவள் தம புதல்வர்களை நல்வழிப்படுத்துவதுபோல் தாங்கள் திரோதான சத்தியாய்ப் புறம்புறம் திரிந்தும் பஞ்சகிருத்திய நடம்புரிந்தும் உதவுகின்றீர்கள். இந்த உரிமைப் பாட்டுக் கமையவாகுதல் என்னையாண்டிரட்சியுங்கள் என்று "திருவருளால்என் பிறவியை வேரறுப்பவனே" என்றும் உங்கள் வியாபகத்தில் வியாபியமாயுடையேன் உம்முடைய உடமைப் பொருள்களில் நானுமொன்று. அவ் வுரிமை முறை கொண்டாகுதல் என்னைக் காப்பாற்றவேண்டாமா என்றும் "உடையானே" என்றும், இவ்வளவு கூறியும் என் இரங்கவில்லையோவென்று சிந்தித்தால் எனக்குபக்குவமில்லையென்று கைவிட்டீர்களோ? இல்லை நான் அகப் பற்றுப் புறப்பற்று ஒழித்து மின்னினும் நிலைமையில்லா விழுப்பொருள் யாதும் வேண்டேன் உன்னடியடைந்த நாயேனுறுபவ மொழித்தல் வேண்டும். என்னைபின் றடிமை கொள்வாய் என்னுயிர்த் தலைவா என்று முகமெலாம் கண்ணீர் வார வணங்கி அடைக்கலப் புகாதவர்கட்கு எம்பெருமான் அருள்செய்யமாட்டாவென்று கருதி "அடியேன் உன் அடைக்கலமே" என்றும் மேலும் தேற்றேகாரம் புணர்த்தி தங்கள் உதவியின்றி வேறுய்ய வழியில்லை யென்று தோன்றவே முறையிடு செய்தார்.

இப்பாவினுல் மிக இரக்கமாய் அன்பாய் இறைவனிடத்தில் விண்ணப்பித்து சிவனடையவேண்டிய மலநீக்கத்தையும் சிவப்பேற்றையும் உய்த்துணரவைத்த மணிவாசகரின் சாதுரியச் சிறப்புப் போற்றத்தக்கது.

எனவே மருந்தும் மந்திரமும் தோத்திரமும் சாத்திரமுமாய் நின்ற அயராவன்புக்கும் அரன்கழல் செல்கைக்கும் வழிகாட்டும் அன்பும் அருளும் இரக்கமும் சொரிந்து மொழிக்குமொழி தித்திக்கும் இத் திவ்விய உயர்ந்த தனிச் செம்மொழித் திருவாசகத் திருப்பதிகங்களின் பொருள் செறிவையும் புண்ணியப் போக்கை புமுணர்ந்து படித்தும் நாத தழும்பேறப் பாராயணமபண்ணியும் பயனடைவோமாக.

---

# அகில இலங்கை இளைஞர் அருள்நெறி மன்றம்

தமிழ்மொழி, கலை, கலாசாரம், ஆத்மீக, சமுதாய வளர்ச்சிகளை நோக்கமாகக்கொண்டு அகில இலங்கை இளைஞர் அருள்நெறி மன்றம் கீரிமலையில் நடந்த இளைஞர்கள் கூட்டத்தில் 17-10-55 திங்கட்கிழமை தவப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் திருமுன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டது. இம் மன்றத்தின் தலைவர் முதலியார் செ. சின்னத்தம்பி அவர்கள், உபதலைவர்கள்: திருவாளர்கள். கே. நடராஜன் (அக்கரைப்பற்று) ஆ. ம. செல்வத்துரை அவர்களும் பொதுச்செயலாளர் திரு ஆ. மார்க்கண்டன் (சுன்னாகம்) அவர்கள் செயலாளர்கள் திரு. பெ. பொ. சிவசேகரம் (திருகோணமலை) வித்துவான் அ. கனகசபை அவர்கள். பொருளாளர் வித்துவான். கி. ஆறுமுகம் அவர்கள். இவர்களுடன் 18 பேர் கொண்ட செயற்குழுஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த மன்றத்தில் பாடசாலைகள் கல்லூரிகளில் உள்ள மாணவ மாணவிகளும் ஏனைய இளைஞர்களும் அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். கிராமங்கள் தோறும், பாடசாலைகள் கல்லூரிகளில் கிளைகள் அமைக்கப்படும். இம் மன்றம் தமிழ்நாடு இளைஞர் அருள்நெறி மன்றத்துடன் இணைக்கப்பட்டு அதன் கிளை ஸ்தாபனமாக வேலைசெய்யும் என்பது குறிப்பிடத்தக்கது. செயற்குழு கூடி விதிகளையும் வேலைத் திட்டங்களையும் அமைக்கும். இம்மன்றத்தின் போஷகராக தவப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் இருந்து வழிநடத்துவார்கள்.

---

## இலங்கை அரசாங்கப் புகையிரதப்பகுதி

### புகையிரதக் கடவைத் திருத்தங்கள்

கடற்கரையோரப் புகையிரதப் பாதையில் கம்புறுகமுவ-மாத்துறை ஆகிய இரு புகையிரத நிலையங்களுக்குமிடையே (93 மைல் 40 சங்கிலி 77 லிங்ஸ்) காலி—மாத்துறை பிடபிள்யுடி குறுக்கிடுமிடத்திலுள்ள புகையிரதக் கடவை திருத்துவதற்காக 1955-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 8-ந் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 10 மணி தொடக்கம் மறுநாட் காலை 5 மணி வரைக்கும் மூடப்பட்டிருக்கும்.

இவ்வேளையில் எவ்வித வாகனங்களும் மாத்துறை அக்குரச வீதியாலும் கபட வீதியாலும் செல்லலாம்.

இ. சி. விசயசேகர,
பிரதம தலைவருக்காக

தபாற்பெட்டி இ 555
கொழும்பு 14-10-55
G. 41, 4-11.

---

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாது வேறொன் றறியேன் பராபரமே".

இங்ஙனம்
உண்மை விளம்பும்

"மனோன்"

அம்பாள்வீதி,
நாயன்மார்கட்டு.

---

## திருவள்ளுவர் திருநாளில் ..... .....

1-ம் பக்கத்தொடர்ச்சி

யோடு குருபூசை செய்தல் வேண்டுமெனவும் கூறுவதால் சைவசித்தாந்தக் கருத்துப் புலப்படும். திருக்குறளை யாத்துத் தந்தருளிய திருவள்ளுவப் பெருந்தகைக்கு நாவலர் அந்தச் சைவசித்தாந்த நெறியைக் கடைப்பிடித்து எழுதி வைத்துச் சென்ற மாசி உத்திரத்தையே சைவமக்கள் கைக்கொண்டொழுகல் வேண்டும் என்பது சொல்லாமலே பெறப்படுகின்றது.

இந்த வருடம் மாசி மாத உத்திரத்தில யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, அகில இலங்கைச் சைவ இளைஞர் சபை, அகில இலங்கைச் சிவனடியார்சபை, தென்மயிலைச் சைவதொண்டர் சபை, கட்டுவன் பாலர்ஞானோதயசங்கம் முதலான சபைகளும பாடசாலைகளும் இத் திருநாளைக் கொண்டாட நிச்சயித்திருக்கின்றார்கள். ஆதலால் சைவச் சபைகள் சமூகச் சபைகள் பாடசாலைகள்—கல்லூரிகள் • மடங்கள் — ஆச்சிரமங்கள்— இல்லங்கள் — முதலான தாபனங்கள ஒவ்வொன்றிலும வள்ளுவர் குருபூசைத திருநாளைக் கொண்டாடிக் குதூகலிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். அன்றைய தினம் ஒவ்வொரு தானங்களிலும சைவ முறைப்படி பூரண கும்பம் வைத்து திருவிளக் கேற்றி மகேஸ்வரபூசை செய்து திருமுறைபோதி திருவள்ளுவநாயனாரை வாழ்த்தி வழிபாடாற்றுக.

---

## பழமை மறந்து புதுமை மோகம் பூத்த நிலைமை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்ணினத்தார் முன்வந்துழைக்கவேண்டும். பத்திரிகைகளிலே எழுதுவதினாலும், மேடைகளிலே சொற்பெருக்காற்றுவதிலுனும் அன்னிய நாகரிகத்தை, கலாசாரரத்தை அகற்ற முடியுமா? இதுபோன்ற பிரசாரங்களினுல் இல்லறம் நல்லறமாகுமென்று எதிர்பார்ப்பது ஏட்டுச் சுரைக்காயைக் கொண்டு கறிசமைக்களண்ணியாங்கு முடியுமன்றோ? இன்றைய அரிவையர்கள் தம் வாழ்க்கையில் சிக்கனத்தையும், சீர்திருத்தத்தையும் உருவாக்க முடியவில்லையென்றால், எதிர்காலத்தின் எழுச்சியை என்னென்று எடுத்துரைப்பது?

பெண்ணினத்தின் பெருமை சிறக்க வாய்மையே தூய்மையாகக் கொண்டு சிறுசிறு வேற்றுமைகளைப் பாராட்டாது சகோதர உணர்ச்சியுடனும் சாந்தகுணத்துடனும் நாட்டுநலன் ஒன்றையே கருத்தாகக் கொண்டு, மாதரினத்தின் மதிப்பு உயர தாய்மைப் பண்பு மிளிரத் தகுந்த தொண்டாற்ற பெண்கள் முற்படவேண்டும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமையாக நான் எனது என்ற மமதையை ஒழித்து உண்மைத் தொண்டு புரிய உயரிய சேவை செய்ய பெண்ணினம் ஒன்றுபடமாட்டாதா? சொல்லிலும செயலிலும் தன்னலமில்லாத பொதுநலம் பொலிவுபட்டும் நங்கையர் பெருமை உயர்ந்து — இன்ப மணங் கமழட்டும், தன்னலங் கருதாத தொண்டாற்றி, பழந் தமிழ்ப் பண்பாண்டில் பரந்து விளங்க, பாரெங்கும் நம் ஈழத்தின் புகழ் ஓங்க, மாதர் உலகு தன கடன் ஆற்ற எல்லாம்வல்ல இறைவன் திருவருள் புரிவாராக!

---

வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவ வேள்வி மல்க
மேன்மைகொள சைவநீதி விளங்குக உலகமெல்லாம

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond.) residing at 245, Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Friday Nov, 4, 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org